www.padippakam.com

# ஒற்றுமைக்காக களத்தில் சந்திப்போம் என்றாயே!

# இதற்காகவா ?



# WHO IS NEXT ?

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
Thamil Eelam Liberation Organization

30 MAY 86

TELO பிரான்ஸ் கிளையின் சர்வதேச செய்தித் தொடர்பு நிலையத்தின் தொலைபேசி இலக்கம் 43 3812 50

படிப்பகம்

### விடுதலைப்புலிகள் தாக்குதலில்

# உயிர் தப்பிய தமிழ் இளைஞர்கள் சென்னையில் பேட்டி!

## "தலைவர் சபாரத்தினம் கூறியபடி சகோதரர்களை தாக்கமாட்டோம்!!"

சென்னை, மே. 16— விடுதலை புலிகளின் பயங்கர தாக்குதலில் இருந்து தப்பி வந்த 'டெலோ' இயக்கத்தைச் சேர்ந்த வீரர்கள் 2 பேர் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்கள்.

ஈழத் தமிழகத்துக்காக போராடி வந்த டெலோ இயக்கத் தலைவர் சபாரத்தினத்தையும் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர் படையினரையும் சமீபத்தில் விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றார்கள் அல்லவா?

**சந்திரன் - ஹென்றி**

இந்த தாக்குதலிலிருந்து தப்பிய டெலோ இயக்க வீரர்கள் சந்திரன் (வயது 28), ஹென்றி (வயது 22) ஆகிய இருவரும் நேற்று முன்தினம் சென்னை வந்தார்கள்.

அவர்கள் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தபோது கூறியதாவது:—

**திடீர் தாக்குதல்**

கள்ளியங்காடு, கட்டப்பிராய் என்ற இடத்தில் உள்ள 'டெலோ' முகாமில் நாங்கள் 70 பேர் இருந்தோம். எங்களிடம் அப்போது ஆயுதம் எதுவும் இல்லை. 2 துப்பாக்கியும், கைக்குண்டுகளும்தான் இருந்தன. அப்போது எங்கள் தலைவர் சபாரத்தினமும் அங்கு இருந்தார்.

கடந்த 29—ந் தேதி காலை 11 மணி அளவில் எங்கள் முகாம் மீது திடீர் என்று விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். பிற்பகல் 3 மணி வரை தாக்குதல் தொடர்ந்தது.

**பதிலடி இல்லை**

அன்று இரவு வரை நாங்கள் பதில் தாக்குதலில் ஈடுபடவில்லை. அதற்கான உத்தரவை எங்கள் தலைவரும் பிறப்பிக்கவில்லை.

எங்கள் மீது நடந்த தாக்குதலை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உள்ளவர்களில் பலர் விரும்பவில்லை. என்றாலும் அவர்கள் சோர்ந்து விடக்கூடாது என்பதற்காக தொடர்ந்து ராக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்திக் கொண்டே இருந்தார்கள்.



''டெலோ'' இயக்க புதுதலைவர் செல்வம்

**எச்சரிக்கை**

அடுத்த நாள் மைக் மூலம் அந்தப்பகுதியிலுள்ள தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் எச்சரித்துக் கொண்டே வந்தார்கள். 'டெலோ' தலைவர் சபாரத்தினம் கொல்லப்பட்டு விட்டார் என்றும் எனவே டெலோபடையினர் உடனே சரண் அடைய வேண்டும் என்றும் அப்படி சரண் அடையாமல் அவர்களுக்கு பாதுகாப்பு தந்தால் அவர்களின் வீடுகள் தாக்கப்படும் என்றும் அவர்கள் மைக்கில் அறிவித்தார்கள்.

**சரண் அடைய**

இதற்கு அடுத்த நாள் சபாரத்தினம் அங்கிருந்து வேறு முகாமுக்கு போய் விட்டார்.

இதைத் தொடர்ந்து மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை போன்ற பகுதிகளை சுற்றி வளைத்து விடுதலை புலிகள் தாக்கினார்கள். டெலோ வீரர்கள் சரண்டைய வேண்டும் என்று எச்சரித்தார்கள்.

**சபாரத்தினம் பதில்**

இந்த தகவல் எங்கள் தலைவர் சபாரத்தினத்துக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் மூர்க்கத்தனமாக தாக்குகிறார்கள். நாம் பதிலடி கொடுக்க வேண்டாமா? என்று கேட்டோம். அதற்கு சபாரத்தினம் 'நமக்கு எதிரி சிங்கள ராணுவத்தினர்தான். தமிழ் சகோதரர்கள் அல்ல. தெரிந்தோ தெரியாமலோ இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதலில் அவர்கள் ஈடுபட்டு உள்ளனர். இது சிலரின் சூழ்ச்சியாகக் கூட இருக்கலாம். அதற்கு நாம் பலியாகக் கூடாது. எக்காரணம் கொண்டும் நமது சகோதரர்களை நாம் தாக்க கூடாது' என்று உத்தர விட்டு விட்டார்.

எங்கள் தலைவரின் இந்த உத்தரவை நாங்கள் மீறவில்லை. ஆனால் இதை விடுதலைப் புலிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு விட்டனர்

**வீடுகள் தரை மட்டம்**

வீடுகளுக்குள் புகுந்து டெலோ வீரர்கள் இருக்கிறார்களா? ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டு உள்ளனவா? என்று சோதனை போட்டார்கள்.

ராக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதில் 80—க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டம் ஆயின.

அநியாயமாக அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப் படுகிறார்களேஎன்று டெலோ வீரர்கள் பலர் சரண் அடைந்தார்கள். அப்படி சரண் அடைந்த வீரர்கள் பலர் ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பில் மட்டும் 11 பேர் கொல்லப்பட்டார்கள்.

**28 குண்டு பாய்ந்து மரணம்**

கடந்த மாதம் 6—ந் தேதி கொக்குவில், கோண்டாவில் பகுதியில் ஒரு வீட்டில் சபாரத்தினம் தங்கி இருந்தார். அவருடன் 10 போராளிகளும் இருந்தார்கள்.

அந்த வீட்டை விடுதலைப் புலிகள் ராக்கெட் வீசி தாக்கினார்கள்.

இதனால் 'தமிழ் மக்களுக்காக போராட வந்தேன். அந்த தமிழ் மக்களுக்காகவே உயிரை விடுகிறேன்' என்று சபாரத்தினம் கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியே வர புறப்பட்டார். அவரை வெளியே போகாதீர்கள் என்று வீட்டுக்காரர்கள் தடுத்து இருக்கிறார்கள்.

'என்னால் அப்பாவி தமிழ் மக்கள் உயிர் பறிக்கப்படக் கூடாது' என்று அவர்களை மீறி சபாரத்தினம் வெளியே வந்தார்.

அப்போது அவரை விடுதலைப் புலிகள் சரமாரியாக சுட்டுக் கொன்றார்கள். சபாரத்தினம் உடலில் 28 குண்டுகள் பாய்ந்து இருந்ததாக உடலை பார்த்தவர்கள் சொன்னார்கள்.

**300 வீரர்களை பிடித்தனர்**

இந்த போராட்டத்தில் சுமார் 100 பேர் கொல்லப்பட்டு விட்டார்கள்.

இளம் போராளிகள் 300 பேரை விடுதலைப் புலிகள் பிடித்து வைத்து உள்ளனர் அவர்களை இதுவரை விடுதலை செய்யவில்லை.

இப்போது டெலோ இயக்கத்தினர் அங்கு உள்ளனர்.

நாங்கள் மனிதாபிமானமுள்ள விடுதலைப்புலிகள் சிலர் மூலமாக அங்கிருந்து தப்பி சென்னை வந்தோம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## சார்லஸ்

'டெலோ' இயக்கத்தை சேர்ந்த பேச்சாளர் சார்லஸ் கூறியதாவது:—

3 மாதங்களுக்கு முன்பு வல்வட்டித்துறையில் விடுதலைப் புலிகள்மீட்டிங் நடந்தது. அப்போது விடுதலைப் புலிகள் தவிர வேறு இயக்கமே இருக்கக் கூடாது என்று முடிவு செய்தார்கள். அதை தொடர்ந்துதான் இந்தத் தாக்குதல் ஆரம்பமானது.

இந்த தாக்குதலை நடத்தாதீர்கள் என்று கேட்கப் போன பெண்களிடம் ஒரு கோட்டை கிழித்து இதை தாண்டி வந்தால் சுட்டுத் தள்ளி விடுவோம் என்று விடுதலைப்புலிகள் மிரட்டினார்கள்.

**ரூ.3 கோடி**

விடுதலைபுலிகள் ரூ. 3 கோடி மதிப்புள்ள ஆயுதம் பயன்படுத்தி தாக்கினர்.

இவைகளை பயன்படுத்தி சிங்கள ராணுவத்தை தாக்கி இருந்தால் தமிழ் ஈழம்பெற ஓரளவுக்காவது உறுதுணையாக இருந்திருக்கும்.

**தலைவர் ஆணை**

தமிழ ஈழம் அடைய வேண்டும்என்று போராடும் அந்த கொள்கையை விட்டு விடாதீர்கள் என்று உயிர் தியாகம் செய்த எங்கள் தலைவர் சபாரத்தினத்தின் கொள்கையை நாங்கள் மீறமாட்டோம்.

எங்களை தாக்கியதற்காக தமிழ் சகோதரர்களாகிய அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்த மாட்டோம்.

பேச்சுவார்த்தை மூலம் சமரச தீர்வு காண்பதையே நாங்கள் விரும்புகிறோம்.

இவ்வாறு சார்லஸ் கூறினார்.

படிப்பகம்